Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 38 of 2025**

Deposition of P.W.6 (L.W.6 ) } Prosecution } Defence }

Name of the Witness : திரு. துரை

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 01.04.2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது பொப்பிடி கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு நான் என் வீட்டிலிருந்து 5வது மைல்கல் போவதற்காக போய்

கொண்டிருந்தேன். கொல்லியப்பன் என்பவர் இடத்தில் போலிசார் நின்று கொண்டிருந்தார்கள். போலிசார் நின்று கொண்டிருப்பதை பார்த்து நான் என்னவென்று கேட்டேன். போலிசார் என்னிடம் என்னுடைய விலாசத்தை கேட்டார்கள், நான் சொன்னேன். போலிசார் என்னிடம் விபத்து நடந்ததை பற்றி என்னிடம் கேட்டார்கள், நான் எதுவும் தெரியாது என்று சொன்னேன். சாட்சி கையெழுத்து கேட்டார்கள், நான் போட்டேன்.

*2)* என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து மட்டும் என்னுடையது. என்னிடம் காட்டப்படும் நான்கு கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து மட்டும் என்னுடையது. பார்வை மகஜரில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகவும். கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள சாட்சி கையெழுத்துக்கள் முறையே **அ.சா.ஆ.3** முதல் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறிப்பு - அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக மாற்ற வேண்டும் என்று அனுமதி கோரினார். அனுமதி வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னை போலிசார் விசாரித்தனர் என்றும் போலிஸ் விசாரணையில்_ *12.05.2024*ம் தேதி மதியம் *12.30*மணிக்கு நானும் எங்க ஊரை சேர்ந்த

கண்ணன் மகன் வெங்கடேசன் என்பவரும் பொப்பிடியில் இருந்து 5வது மைல்கல் செல்வதற்காக தார் ரோட்டில் எங்க ஊர் ராஜேந்திரன் நிலத்தருகே சென்று கொண்டிருந்த போது மாரண்டஅள்ளி காவல் ஆய்வாளர் எங்களை நிறுத்தி இன்று அதிகாலை சுமார் 04.30மணிக்கு பாலக்கோடு தீர்த்தகிரி நகரை சேர்ந்த பெருமாள் மகன் கோவிந்தன் என்பவர் ஆட்டு வியாபாரம் சம்மந்தமாக கூசுக்கல் கிராமத்திலிருந்து பொப்பிடி வழியாக மாரண்டஅள்ளி சந்தைக்கு செல்வதற்காக அவருடைய TN 29 L 4664 TVS Victor வண்டியில் சென்ற போது பாலக்கோடு ஹஸ்சிங் போர்ட்டில் வசிக்கும் மற்றும் பாலக்கோடு நீதிமன்றத்தில் வக்கீலாக வேலை பார்க்கும் பேபி மகன் கோவிந்தசாமி என்பவருக்கும் கோவிந்தனுக்கும் உள்ள நிலப்பிரச்சனை தொடர்பாக கோவிந்தனை கொலை செய்வதற்காக திட்டம் போட்டு அவருக்கு கீழ் வேலை செய்யும் அவருடைய ஜீனியர்களை வைத்து TN 24 AR 5449 என்ற நான்கு சக்கர வாகனத்தையும், TN 24 S 6935 TATA INDIGA என்ற காரையும் மற்றும் TN 24 K 8655 என்ற பஜாஜ் இரு சக்கர வாகனத்தையும்

2) கோவிந்தன் ஒட்டி வந்த வாகனத்தின் மீது மோதவிட்டு அவரை தீர்த்து கட்ட திட்டம் போட்டு நிறைவேற்ற சம்பவயிடத்தில் வாகனங்களை கோவிந்தன் மீது மோதவிடும் போது கோவிந்தன் காயங்களுடன் தப்பித்து அங்கு இருந்தவர்கள் மற்றும் கோவிந்தன்

மனைவி மகனுடன் பாலக்கோடு அரசு மருத்துவமனையில் அட்மிட் ஆக கொடுத்த புகார் வாக்குமூலத்தின் பேரில் மாரண்டஅள்ளி காவல் நிலைய குற்ற எண். 98/2024 சட்டபிரிவு 147, 148, 294(பி), 324, 307 இதச ஆக வழக்கு பதிவு செய்துள்ளதாகவும், வழக்கின் நிமித்தம் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் , பார்வை மகஜா் தயாரிக்க போவதாகவும், அதற்கு சாட்சிகளாக என்னையும் என்னுடன் வந்த வெங்கடேசன் என்பவரையும் உடனிருக்க கேட்டுக் கொண்டதின் பேரில் நாங்கள் உடனிருந்து காவல் ஆய்வாளர் தயார் செய்த பார்வை மகஜரில் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் என்றும்,

3) பிறகு சம்பவயிடத்தில் இருந்த TN 24 AR 6449 என்ற பதிவு எண் கொண்ட நாக்கு சக்கர தோஸ்த் வாகனத்தை மதியம் 02.15 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிய போதும், மாலை 02.50மணிக்கு TN 24 S 6935 என்ற பதிவு எண் கொண்ட TATA INDIGO காரை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிய போதும் இறுதியாக மாலை 03.35 மணிக்கு சம்பவயிடத்தில் கீழே விழுந்து கிடந்த வாதி ஓட்டி வந்த TN 29 L 4664 என்ற பதிவு எண் கொண்ட TVS VICTOR இரு சக்கர வாகனத்தையும் சம்பவயிடத்தில் கீழே கிடந்த வக்கீல் கோவிந்தசாமியின் OPPO A15 என்ற கைபேசியை 15.50 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிய போதும் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்று

போலிஸ் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை விபத்து நடந்ததை பற்றி தெரியுமா என்று தான் கேட்டார்கள், நான் தெரியாது என்று சொன்னேன்.

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.
**S.C.No. 38 of 2025**

Deposition of P.W.7 (L.W.7 ) } Prosecution } Defence }

Name of the Witness : திரு. வெங்கடேசன்

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 27.03.2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது பொப்பிடி கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். சுமார் 2 வருடத்திற்கு முன்பு நானும், துரையும் 5வது மைலில் சென்று கொண்டிருந்தோம். போலிசார் அங்கு நின்று கொண்டிருந்தார்கள். என்னவென்று போய் பார்த்தோம். அப்போது

போலிசார் என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள், நானும், துரையும் சாட்சி கையெழுத்து போட்டோம்.

*2)* என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் என்னுடையது. என்னிடம் காட்டப்படும் நான்கு கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து மட்டும் என்னுடையது. பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து மட்டும் ***அ.சா.ஆ.7*** ஆகவும். கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள சாட்சி கையெழுத்துக்கள் முறையே ***அ.சா.ஆ.8*** முதல் ***அ.சா.ஆ.11*** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

**குறிப்பு - அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக மாற்ற வேண்டும் என்று அனுமதி கோரினார். அனுமதி வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னை போலிசார் விசாரித்தனர் என்றும் போலிஸ் விசாரணையில்_ *12.05.2024*ம் தேதி மதியம் *12.30*மணிக்கு நானும் எங்க ஊரை சேர்ந்த சித்தராஜ் மகன் துரை என்பவரும் பொப்பிடியில் இருந்து 5வது மைல்கல் செல்வதற்காக தார் ரோட்டில் எங்க ஊர் ராஜேந்திரன் நிலத்தருகே சென்று கொண்டிருந்த போது மாரண்டஅள்ளி காவல் ஆய்வாளர் எங்களை நிறுத்தி இன்று அதிகாலை சுமார் *04.30*மணிக்கு பாலக்கோடு தீர்த்தகிரி

நகரை சேர்ந்த பெருமாள் மகன் கோவிந்தன் என்பவர் ஆட்டு வியாபாரம் சம்மந்தமாக கூசுக்கல் கிராமத்திலிருந்து பொப்பிடி வழியாக மாரண்டஅள்ளி சந்தைக்கு செல்வதற்காக அவருடைய TN 29 L 4664 TVS Victor வண்டியில் சென்ற போது பாலக்கோடு ஹஸ்சிங் போர்ட்டில் வசிக்கும் மற்றும் பாலக்கோடு நீதிமன்றத்தில் வக்கீலாக வேலை பார்க்கும் பேபி மகன் கோவிந்தசாமி என்பவருக்கும் கோவிந்தனுக்கும் உள்ள நிலப்பிரச்சனை தொடர்பாக கோவிந்தனை கொலை செய்வதற்காக திட்டம் போட்டு அவருக்கு கீழ் வேலை செய்யும் அவருடைய ஜீனியர்களை வைத்து TN 24 AR 5449 என்ற நான்கு சக்கர வாகனத்தையும், TN 24 S 6935 TATA INDIGA என்ற காரையும் மற்றும் TN 24 K 8655 என்ற பஜாஜ் இரு சக்கர வாகனத்தையும்

2) கோவிந்தன் ஓட்டி வந்த வாகனத்தின் மீது மோதவிட்டு அவரை தீர்த்து கட்ட திட்டம் போட்டு நிறைவேற்ற சம்பவயிடத்தில் வாகனங்களை கோவிந்தன் மீது மோதவிடும் போது கோவிந்தன் காயங்களுடன் தப்பித்து அங்கு இருந்தவர்கள் மற்றும் கோவிந்தன் மனைவி மகனுடன் பாலக்கோடு அரசு மருத்துவமனையில் அட்மிட் ஆக கொடுத்த புகார் வாக்குமூலத்தின் பேரில் மாரண்டஅள்ளி காவல் நிலைய குற்ற எண். 98/2024 சட்டபிரிவு 147, 148, 294(பி), 324, 307 இதச ஆக வழக்கு பதிவு செய்துள்ளதாகவும், வழக்கின் நிமித்தம் சம்பவயிடத்தை

பார்வையிட்டு மாதிரி வரைபடம் , பார்வை மகஜா் தயாரிக்க போவதாகவும், அதற்கு சாட்சிகளாக என்னையும் என்னுடன் வந்த துரை என்பவரையும் உடனிருக்க கேட்டுக் கொண்டதின் பேரில் நாங்கள் உடனிருந்து காவல் ஆய்வாளா் தயாா் செய்த பார்வை மகஜரில் சாட்சிகளாக கையெழுத்து போட்டோம் என்றும்,

*3)* பிறகு சம்பவயிடத்தில் இருந்த TN 24 AR 6449 என்ற பதிவு எண் கொண்ட நாக்கு சக்கர தோஸ்த் வாகனத்தை மதியம் 02.15 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிய போதும், மாலை 02.50மணிக்கு TN 24 S 6935 என்ற பதிவு எண் கொண்ட TATA INDIGO காரை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிய போதும் இறுதியாக மாலை 03.35 மணிக்கு சம்பவயிடத்தில் கீழே விழுந்து கிடந்த வாதி ஓட்டி வந்த TN 29 L 4664 என்ற பதிவு எண் கொண்ட TVS VICTOR இரு சக்கர வாகனத்தையும் சம்பவயிடத்தில் கீழே கிடந்த வக்கீல் கோவிந்தசாமியின் OPPO A15 என்ற கைபேசியை 15.50 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றிய போதும் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்று போலிஸ் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை .. இல்லை</u>**

Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 38 of 2025**

| | | |
|---|---|---|
| Deposition of P.W.8 (L.W.8 ) | } | Prosecution |
| | } | Defence |
| | } | |

Name of the Witness : திரு.ரவி

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 01.04.2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மல்லாபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 2 வருடத்திற்கு முன்பு 5வது மாதம்

நான் மல்லாபுரம் டீ கடையில் டீ சாப்பிட்டு கொண்டிருந்தேன். போலிசார் என்னிடம் கையெழுத்து போட சொன்னார்கள். நான் கையெழுத்து போட்டேன். என்னுடன் வேறு யாரும் எனக்கு தெரிந்து கையெழுத்து போடவில்லை. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து மட்டும் ***அ.சா.ஆ.12*** ஆகவும், என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து மட்டும் ***அ.சா.ஆ.13*** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறிப்பு - அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக மாற்ற வேண்டும் என்று அனுமதி கோரினார். அனுமதி வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னை போலிசார் விசாரித்தனர் என்றும் போலிஸ் விசாரணையில் 12.05.2024ம் தேதி மாலை 06.00 மணிக்கு நானும் பாலக்கோடு பெருமாள் கோவில் நகரை சேர்ந்த சின்னசாமி மகன் நாகராஜ் என்பவரும் மல்லாபுரம் பஸ் நிறுத்தம் அருகே இருந்த டீ கடையில் டீ குடித்து கொண்டிருந்தோம் என்றும், அப்போது மாரண்டஅள்ளி காவல் ஆய்வாளர் போலிஸ் வாகனத்தில் வந்து என்னையும் ரவியையும்

கூப்பிட்டு 12.05.2024ம் தேதி அதிகாலை 4.30 மணிக்கு பொப்பிடி - மாரண்டஅள்ளி தார் ரோட்டில் ராஜேந்திரன் விவசாய நிலத்தின் அருகே பாலக்கோடு தீர்த்தகிரி நகரை சேர்ந்த கோவிந்தன் என்பவர் அவருடைய இரு சக்கர வாகனத்தில் மாரண்டஅள்ளி சந்தைக்கு வந்து கொண்டிருந்த போது கோவிந்தனுக்கும் பாலக்கோடு கடமடை ஹஸ்சிங் போர்டில் குடியிருக்கும் வக்கீல் கோவிந்தசாமிக்கும் நில பிரச்சனை சம்மந்தமாக முன்விரோதம் இருந்த வந்த நிலையில் வக்கீல் கோவிந்தசாமியும், அவரிடம் ஜீனியர்களாக வேலை செய்யும் கார்த்திக், ரவி, கோவிந்தராஜ், அரவிந்த் மற்றும் சாந்தகுமார் ஆகியோர் ஒன்று சேர்ந்து கோவிந்தனை கொலை செய்ய திட்டம் போட்டு வாகனங்களை மோதவிட்டு கொலை செய்து விபத்து போல சித்தரித்து விடலாம் என்று முடிவெடுத்து சம்பவயிடத்தில் கோவிந்தன் மீது வாகனங்கள் மோதிய போது கோவிந்தன் தப்பித்து பாலக்கோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்து கொடுத்த புகார் வாக்குமூலத்தின் பேரில்

2) மாரண்டஅள்ளி காவல் நிலைய குற்ற எண் 98/2024 சட்டபிரிவு 147, 148, 294(பி), 324, 307 இதச ஆக வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை செய்து வந்த நிலையில் இவ்வழக்கில் தொடர்புடைய 5ம் எதிரி அரவிந்த் என்பவர் பென்னாகரத்தில் இருப்பதாக தகவல் தெரிய வருவதாகவும், எதிரியை கைது செய்தவுடன் அவரிடம் ஒப்புதல்

வாக்குமூலம் பதிவு செய்ய உள்ளதாகவும், எதிரி அவரிடம் உள்ள வழக்கு சம்மந்தப்பட்ட சொத்துக்கள் கைப்பற்றப்பட்டால் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகளாக கையொப்பமிட எங்கள் இருவரையும் அழைத்து கொண்டு பென்னாகரம் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம் எதிரே உள்ள இந்தியன் வங்கியின் முன்பு இருந்த புளிய மரத்து அடியில் ஒரு பைக்குடன் நின்று கொண்டிருந்த எதிரி அரவிந்த் என்பவரை காவல் ஆய்வாளருடன் வந்த தகவலா் அடையாளம் காட்ட எதிரியிடம் கைதுக்கான காரணம் கூறி மாலை 07.00 மணிக்கு அங்கேயே கைது செய்து மாலை 07.15மணிக்கு எதிரியிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், நாகராசும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், பின்பு எதிரி அரவிந்த் சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அவர் வைத்திருந்த TN 24 K 8655 என்ற பதிவு எண் கொண்ட பஜாஜ் இரு சக்கர வாகனத்தையும். மேற்படி வாகனத்தில் வைத்திருந்த சுமார் 3 1/2 நீளமுள்ள ஒரு மரக்கட்டையையும் எடுத்து ஆஜர் செய்ததை காவல் ஆய்வாளாராகிய தாங்கள் இரவு 08.15 மணிக்கு கைப்பற்றுதல் மகஜா் தயாா் செய்து கைப்பற்றினீர்கள் என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், பிறகு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் பென்னாகரத்திலிருந்து புறப்பட்டு இரவு

9.45 மணிக்கு மாரண்டஅள்ளி காவல் நிலையம் வந்தோம் என போலிஸ் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

மல்லாபுரத்தில் உள்ள டீ கடையில் தான் நான் கையெழுத்து போட்டேன்.

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.

Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 38 of 2025**

| | | |
|---|---|---|
| Deposition of P.W.9 (L.W.9 ) | } | Prosecution |
| | } | Defence |
| | } | |

Name of the Witness : திரு.நாகராஜ்

Father/Husband Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Calling :

Age :

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 01.04.2026.

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மல்லாபுரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் ஜே.சி.பி வைத்து தொழில் செய்து வருகிறேன். 12.05.2024 அன்று நானும், என் ஜேசிபி டிரைவரும் மல்லாபுரம் டீ கடையில் டீ சாப்பிட்டு

கொண்டிருந்தோம். அங்கு மாரண்டஅள்ளி போலிசார் போலிஸ் ஜீப் வந்தார்கள். விபத்து நடந்ததை குறித்து போலிசார் விசாரித்தார்கள். மாலை 6 மணிக்கு மேல் அரவிந்தன் என்பவரை பென்னாகரம் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு கூப்பிட்டு வந்து போலிசார் விசாரணை செய்தார்கள். பஜாஜ் இரு சக்கர வாகனத்தையும். ஒரு கட்டை, ஒரு செல்போன் ஆகியவற்றை போலிசார் கைப்பற்றினார்கள். அதில் என்னிடம் போலிசார் கையெழுத்து வாங்கினார்கள். என்னுடன் ரவி என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டார். சாட்சி 5ம் எதிரி அரவிந்தை அடையாளம் காட்டுகிறார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

2) என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த இரண்டாவது சாட்சி கையெழுத்து மட்டும் ***அ.சா.ஆ.14*** ஆகவும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து மட்டும் ***அ.சா.ஆ.15*** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**குறிப்பு - அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக மாற்ற வேண்டும் என்று அனுமதி கோரினார். அனுமதி வழங்கப்பட்டது. குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னை போலிசார் விசாரித்தனர் என்றும் போலிஸ் விசாரணையில் *12.05.2024*ம் தேதி மாலை 06.00 மணிக்கு நானும் மல்லாபுரம்

கோவிந்தகவுண்டர் மகன் ரவியும் மல்லாபுரம் பஸ் நிறுத்தம் அருகே இருந்த டீ கடையில் டீ குடித்து கொண்டிருந்தோம் என்றும், அப்போது மாரண்டஅள்ளி காவல் ஆய்வாளர் போலிஸ் வாகனத்தில் வந்து என்னையும் ரவியையும் கூப்பிட்டு 12.05.2024ம் தேதி அதிகாலை 4.30 மணிக்கு பொப்பிடி - மாரண்டஅள்ளி தார் ரோட்டில் ராஜேந்திரன் விவசாய நிலத்தின் அருகே பாலக்கோடு தீர்த்தகிரி நகரை சேர்ந்த கோவிந்தன் என்பவர் அவருடைய இரு சக்கர வாகனத்தில் மாரண்டஅள்ளி சந்தைக்கு வந்து கொண்டிருந்த போது கோவிந்தனுக்கும் பாலக்கோடு கடமடை ஹஸ்சிங் போர்டில் குடியிருக்கும் வக்கீல் கோவிந்தசாமிக்கும் நில பிரச்சனை சம்மந்தமாக முன்விரோதம் இருந்த வந்த நிலையில் வக்கீல் கோவிந்தசாமியும், அவரிடம் ஜீனியர்களாக வேலை செய்யும் கார்த்திக், ரவி, கோவிந்தராஜ், அரவிந்த் மற்றும் சாந்தகுமார் ஆகியோர் ஒன்று சேர்ந்து கோவிந்தனை கொலை செய்ய திட்டம் போட்டு வாகனங்களை மோதவிட்டு கொலை செய்து விபத்து போல சித்தரித்து விடலாம் என்று முடிவெடுத்து சம்பவயிடத்தில் கோவிந்தன் மீது வாகனங்கள் மோதிய போது கோவிந்தன் தப்பித்து பாலக்கோடு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்து கொடுத்த புகார் வாக்குமூலத்தின் பேரில்

2) மாரண்டஅள்ளி காவல் நிலைய குற்ற எண் 98/2024 சட்டபிரிவு 147, 148, 294(பி), 324, 307 இதச ஆக வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை செய்து வந்த நிலையில் இவ்வழக்கில் தொடர்புடைய 5ம் எதிரி அரவிந்த் என்பவர் பென்னாகரத்தில் இருப்பதாக தகவல் தெரிய வருவதாகவும், எதிரியை கைது செய்தவுடன் அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ய உள்ளதாகவும், எதிரி அவரிடம் உள்ள வழக்கு சம்மந்தப்பட்ட சொத்துக்கள் கைப்பற்றப்பட்டால் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகளாக கையொப்பமிட எங்கள் இருவரையும் அழைத்து கொண்டு பென்னாகரம் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகம் எதிரே உள்ள இந்தியன் வங்கியின் முன்பு இருந்த புளிய மரத்து அடியில் ஒரு பைக்குடன் நின்று கொண்டிருந்த எதிரி அரவிந்த் என்பவரை காவல் ஆய்வாளருடன் வந்த தகவலா் அடையாளம் காட்ட எதிரியிடம் கைதுக்கான காரணம் கூறி மாலை 07.00 மணிக்கு அங்கேயே கைது செய்து மாலை 07.15மணிக்கு எதிரியிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், ரவியும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், பின்பு எதிரி அரவிந்த் சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அவர் வைத்திருந்த TN 24 K 8655 என்ற பதிவு எண் கொண்ட பஜாஜ் இரு சக்கர வாகனத்தையும். மேற்படி வாகனத்தில் வைத்திருந்த சுமார் 3 1/2 நீளமுள்ள ஒரு

மரக்கட்டையையும் எடுத்து ஆஜர் செய்ததை காவல் ஆய்வாளராகிய தாங்கள் இரவு 08.15 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினீர்கள் என்றும், அந்த கைப்பற்றுதல் மகஜரில் நாங்கள் இருவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், பிறகு எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் பென்னாகரத்திலிருந்து புறப்பட்டு இரவு 9.45 மணிக்கு மாரண்டஅள்ளி காவல் நிலையம் வந்தோம் என போலிஸ் விசாரணையில் சொல்லி விட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நானும். ரவியும் பென்னாகரம் போனோம். அங்கு காவல் துணை கண்காணிப்பு அலுவலகம் எதிரே இருக்கும் ஏடிஎம் மிசின் அருகே போனோம். இந்த விவரத்தை நான் போலிஸ் விசாரணையிலும் என்னுடைய முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் அங்கு போகாததால் தான் போலிஸ் விசாரணையிலும் என்னுடைய முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அரவிந்தை அழைத்து கொண்டு பாலக்கோடு டிஎஸ்பி அலுவலகம் சென்றோம். பின்பு மாரண்டஅள்ளி காவல் நிலையம் சென்று கையெழுத்து போட சொன்னார்கள். பாலக்கோடு டிஎஸ்பி அலுவலகத்தில் அரவிந்தை போலிசார் விசாரித்தார்களா என்று தெரியாது. நான் அப்போது

வெளியிலேயே இருந்தேன். மாரண்டஅள்ளி காவல் நிலையத்தில் அரவிந்தை போலிசார் விசாரித்தார்கள். மாரண்டஅள்ளி காவல் நிலையத்தில் வைத்து தான் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள்.

2) பாலக்கோடு டிஎஸ்பி அலுவலகத்திற்கு அரவிந்தை அழைத்து சென்ற விவரத்தை என்னுடைய முதல் விசாரணையிலும், குவிமுச 161 வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். மாரண்டஅள்ளி காவல் நிலையத்தில் 08.00, 8.30 மணிக்கு எதிரியை விசாரித்தார்கள். நான் கையெழுத்து போட்ட பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

மற்ற எதிரிகள் தரப்பில் மேற்சொன்ன குறுக்கு விசாரணையை ஏற்று கொள்வதாக கூறப்பட்டது.

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.